விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
YALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 02 வியாழக்கிழமை (14.02.2002) தொலைபேசி 3378 ஒலி 57

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
"RENNY"

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தமிழர்களின் மரபுவழித் தாயகத்தில்

# புலிகளின் சுதந்திரமான நடமாட்டம்

# இராணுவம் முகாமில் தங்கியிருத்தல்!

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெறுவதில் இழுபறி முக்கிய சரத்துக்கள் வன்னிக்கு அனுப்பபடும்.

(லண்டன்)

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய சரத்துக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்னித்தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கிருந்துவரும் முடிவுகளைப் பொறுத்தே இறுதிமுடிவு அறிவிக்கப்படும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.**

நோர்வே அரசு தயாரித்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்படாத முக்கிய விடயங்களில் விடுதலைப் புலிகளின் அங்கீகாரம் பெறவேண்டிய நிலையில் இருப்பதால் அதற்குரிய நடவடிக்கைகளை அன்ரன் பாலசிங்கம் எடுத்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணக்கம் காணப்படாத இரண்டு விடயங்களில் புலிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

✸ விடுதலைப்புலிகள் தமிழர்களின் தாயகமான இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் சுதந்திரமாக நடமாடுதல்.

✸ இராணுவத்தினர் தத்தம் முகாம்களில் தங்கியிருத்தல்.

போன்ற விடயங்களில் அரசும், விடுதலைப்புலிகளும் இன்னமும் இணக்கம் காணப்படவில்லையென்று புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## பஸ் - சைக்கிள் விபத்து மாணவி ஸ்தலத்தில் பலி

### சுன்னாகத்தில் பரிதாபச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்சும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணம் செய்த சிறுமி அவ்விடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 7.30மணியளவில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியில் இடம் பெற்ற இவ் விபத்தில் சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த, மல்லாகம் குளமங்கால் றோ.க.த.க.பாடசாலை மாணவி மங்களேஸ்வரன் மரீனா (வயது 13) என்பவரே பரிதாபகரமான முறையில் உயிரிழந்தவராவார்.

(8ம் பக்கம்பார்க்க)

## வன்னிக்கான பாதைகள் நாளை திறந்து வைப்பு!

(வவுனியா)

வன்னிப்பகுதிக்கு மக்கள் போக்குவரத்து செய்யக்கூடிய வகையில் நாளை வெள்ளிக்கிழமை இரண்டு பாதைகள் திறந்து விடப்படவுள்ளன.

கிளிநொச்சி வரையான கண்டி வீதியும், உயிலங்குளம் 9ம் கட்டைப்பாதையுமே நாளை திறந்து விடப்பட இருப்பதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நீண்டகால இடைவெளிக்குப் பின் இரண்டு பாதைகள் திறந்து விடப்பட இருப்பது சமாதானத்துக்கான ஒரு திறவுகோல் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதுவரைகாலம் பாவனையில் இருந்துவந்த பிரமணாலங்குளம் பாதை இதன்பின் முற்றாக மூடப்பட்டு விடும். (வ)

## யாழ். மாக்பெட் எரிபொருள் நிலையத்திற்கு ஜயலத் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மாக்பெட் எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்று திடீரென விஜயம் செய்தார்.

அங்கு எரிபொருளை பெற்றுக் கொள்ள வரிசையில் காத்து நின்ற மக்களுடன் அவர் கலந்துரையாடினார்.

எரிபொருள் விநியோகத்தில் இருக்கும் தடைகள், சிக்கல்களை நீக்கி சாதாரணமாக எல்லா இடங்களிலும் எரிபொருள் கிடைக்கத்தக்க வகையில் எரிபொருள் விநியோகத்தை சீராக்க தான் ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அங்கு நின்ற மக்களிடம் உறுதியளித்தார். (இ.10)

## கப்பம் வாங்கியவர்கள் அகப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா பாகற்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் பெயரைக்கூறி கப்பம்வாங்கிய இருவரை விடுதலைப்புலிகள் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தமிழ்க் குழுவை சேர்ந்தவர்கள்' எனப்பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்பு மார்ச் 7ம்,8ம் திகதிகளில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி

## எரிபொருள் தட்டுப்பாடு இன்னும் ஒரு சில தினங்களில் நீங்கும்

### நீதிமன்றில் அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் உட்பட மற்றும் எரிபொருட்கள் யாவும் இன்னமும் இர

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குக் கிழக்கு மாகாண பிரதிப் பொது முகா

## யாழ். சிறைக்கைதிகளின் அறிக்கையை சட்டமா அதிபருக்கு

## யாழ். சிறைக்கைதிகளின்

# அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்க நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 17தமிழ்க் கைதிகளின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அறிகைகளை உடன் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்குமாறு யாழ். நீதவான் இ.த.விக்னராஜா காங்கேசன்துறை குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை

(8ம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்பு மார்ச் 7ம்,8ம் திகதிகளில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மார்ச் மாதம் 7ம், 8ம் திகதிகளில் நடைபெறுமென உதவித்தேர்தல் ஆணையாளர் சேனநாயக்கா அறிவித்துள்ளார்.

இத் தபால்மூலமான வாக்களிப்பு முன்னர் மார்ச் மாதம் 13ம், 14ம் திகதிகளில் நடைபெறும் என அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது (வ)

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் உட்பட மற்றும் எரிபொருட்கள் யாவும் இன்னமும் இரண்டு நாட்களுக்குள் போதிய ளவு கிடைக்கக் கூடியவகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குக் கிழக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் எஸ். சிவஞானம்

(8ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஆறுமுகம் மட்டக்களப்பு விஜயம்

## புலி உறுப்பினர்களுடன் சந்திப்பு

(மட்டக்களப்பு)

திருகோணமலைக்கு விஜயத்தை மேற்கொண்ட தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதிகள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று மட்டக்களப்பிற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

திருகோணமலை சீனன்குடா விமானப்படைத் தளத்திலிருந்து ஹெலிகப்டர் மூலம் மட்டக்களப்பை அடைந்து அங்கிருந்து பட்டிருப்பு சோதனைச்சாவடியூடாக புலிக

(8ம் பக்கம் பார்க்க)

# படைகளில் இருப்பவர்கள் நாளுக்கு நாள் தப்பி ஓட்டம்!

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன திடுக்கிடும் தகவல்

(யாழ்ப்பாணம்)

படைகளில் இருப்பவர்களில் பெருமளவானோர் அதிலிருந்து நாள்தோறும் தப்பியோடுகின்றனர். இதற்கான காரணத்தை கண்டறிய அரசாங்கம் முழு அளவில் மீளாய்வு ஒன்றை செய்யவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தகவல் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் ஹொரண தொகுதியில் புதிய வீடமைப்புத் திட்டத்தை அமைச்சர் மாரப்பன ஆரம்பித்து வைத்தார்.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் படையினருக்கு மிகச் சிறந்த பயிற்சிகள், படைக்கலக் கருவிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் படையினருக்கான நிவாரணங்கள், நலன்புரிச் சேவைகள் சிறந்த முறையில் வழங்கப்படுகின்றன.

இந் நிலையில் இவற்றையெல்

(8ம் பக்கம் பார்க்க)

## Z ஸ்கோர் முறையை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு

# பல்கலைக்கழக அனுமதி காலதாமதமாகும்!

## மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் ஹசீம் தகவல்

இவ்வாண்டு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தாமதமாகலாம் என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சிகளுக்கான அமைச்சர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### சிறு விளம்பரம்

**தேவை**

சிரட்டைக்கரி தயாரிக்கத் தெரிந்தவர்கள் தேவை. தொடர்பு: பா. சசிந்தன் 692, கே. கே. எஸ். வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். (C,3532)

**சோதிடம்**

237/16 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள வாணி சோதிடம்இன்று14.02.2002 முதல் பெருமாள் கோயிலுக்கு முன்பாக யாழ்பாடி வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் செயற்படும். (4485)


# யாழ். போதனாவைத்தியசாலையின் தேவைகள் விரைவில் நீக்கப்படும்

## அங்கு விஜயம் செய்த அமைச்சர் ஜயலத் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் புனரமைப்புச் செய்யப்பட்ட குழந்தைகள் விடுதி, நோயாளர்கள் பணம் செலுத்தி தங்கிச்சிகிச்சை பெறும் விடுதி மற்றும் ஆண் தாதியர் இளைப்பாற்று மண்டபம் ஆகியவற்றை புனர்வாழ்வு புனரமைமப்பு அமைச்சர் டாக்டர்ஜயலத் ஜயவர்த்தனா வைபவரீதியாக திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் நேற்றுக்காலை யாழ்; போதனா வைத்திய சாலைக்கு விஜபம் செய்தார்,

அங்கு வைத்தியசாலை நிர்வாகப்பிரிவினரால் அமைச்சருக்கும் அவரது அதிகாரிகளுக்கும் பெரும்வரவேற்பு அளிக்கப்பட்டது.

வைத்தியசாலை மருந்துக் களஞ்சிய மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் ஜயலத் உரையாற்றுகையில்,

யாழ். குடாநாட்டிலிருந்து மேலதிக சிசிச்சைக்காக கொழும்பு செல்லும் நோயாளர்கள், இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதிஇன்றிபயணம்செய்ய முடியும், இதனை நீக்கும் அறிவுப்பு மிக விரைவில் வெளியிடப்படுமென்றும் கூறினார்.

அத்துடன் வைத்தியசாலைக்கு உள்ள பற்றாக்குறைகள், தேவைகள் மிக விரைவில் நிறைவு செய்யப்படும். மருந்துப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறும்நடைமுறை விரைவில் நீக்கப்படுமென்றும் அமைச்சர் ஜயலத் நம்பிக்கை வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி (செல்வி) நவமலர் கனகரட்ணம் பேசுகையில்,

வடபகுதியில் உள்ள மிகப் பிரதானமாக இவ் வைத்திய சாலைக்குவளப்பற்றாக்குறை இருப்பதனைச் சுட்டிக்காட்டி வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துப்பொருட்களை கொண்டுவருவதற்கு அவசர நோயாளர்களைப் பிறஇடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கும், பயணப்பாதுகாப்பு முறை நடைமுறையில் இருப்பது பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின் றதெனவும் அதனை நீக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இந்நிகழ்வில் பேசுகையில்,

கடந்த பத்து வருடங்களுக்குப் பின்னர் கபினற் அந்தஸ்துடைய அமைச்சரொருவர் யாழ், வைத்தியசாலைக்கு வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கும் விடயமென்று கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம். கே. சிவாஜிலிங்கம் மற்றும் யாழ். நாகவிகாரை ஞானரட்ணதேரர், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-104)

## மாதாந்த உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகிய நோயாளர்களுக்கான உதவிப்பணம் மற்றும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான மாசி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார். (செ-223

## இருநாடுகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன

(வாஷிங்டன்)

ரஷ்யாவும் வடகொரியாவும் வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் நேற்று கைச்சாத்திட்டுள்ளன.

இவ் உடன்படிக்கை மூலம் இவ்விருநாடுகளினதும் பொருளாதாரம் மேம்படும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. (செ)

## மீன் விலை அதிகரிப்பு

(அனலைதீவு)

அனலைதீவில் ஒரு கிலோ மீனின் விலை 80 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அங்கே பிடிக்கப்படும் மீன்கள் வெளியிடங்களுக்கு எடுத்மிச் சென்று விற்பனை செய்யப்படுவதனாலேயே இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ-240)

## கலந்துரையாடல்

(காரைநகர்)

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள ஆலய வருடாந்தமஹோற்சவ விழா தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10. 30 மணிக்கு மேற்படி ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-246)

## மகஜர் அனுப்பிவைப்பு

(காரைநகர்)

1985ம் ஆண்டுஇராணுவ நடவடிக்கையினால் பலகாட்டுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றவும் ஏற்பட்ட இழப்புகளிற்கு இழப்பீடுகள் பெற்றுத்தருமாறும் கோரி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிற்கு இந்து கலாசார அமைச்சர் மூலம் காரைநகர் வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். (உ-246)


**பனை அபிவிருத்திச் சபை,**
**திக்கம் வடிசாலை**

### பாதுகாப்பு அறை கூறுவிலை கோரல்

மேற்படி வடிசாலையில் பாதுகாப்பு ஊழியர் கடமையாற்றும் கட்டிடம்ஒன்று 12'-0'' ×9'- 0''× 8'-0' அளவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டிட வரைபடத்தை பனை அபிவிருத்திச்சபை, 53 கண்டிவீதியில்உள்ள தலைமைக்காரியாலயத்தில் அல்லது திக்கம் வடிசாலையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களைஏற்று 01.03.2002 க்கு முன்னர் கூறுவிலையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொ. சிவபாதம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

பனை அபிவிருத்திச்சபை
53, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.

(C-3531)


## இராசி பலன்

14.2.2002
(மாசி2, வியாழன்)
துதியை பி.ப 5.27வரை
பூரட்டாதிமுழுவதும்
ராகுகாலம்-2.03-3.33
நல்லநேரம்-8.03-9.33
சித்தம்

**மேடம்**
காரியசித்தி, பெரியோர் உதவி, தெய்வ சிந்தை, போனநன்மை

**இடபம்**
கடினஉழைப்பு, பிறர்உதவி காரியம்கைகூடும், அதிகாரம்

**மிதுனம்**
ஆன்றோர்மதிப்பு, புதிய தொழில்முயற்சி, உடல் நலக் குறைவு, மனப்பயம்

**கடகம்**
உடல்வியாதி, எதிர்பாராத மனஸ்தாபம், காரியதாமதம், பிரியம்

**சிங்கம்**
குடும்பசுகம், நண்பர்கள் உதவி, காரியஅனுகூலம், பொருளாசேர்க்கை

**கன்னி**
காரியஜெயம், தொழில் விருத்தி, சந்தோசமானசம்பவம், சத்துருஜெயம்

**துலாம்**
காரியஇடையூறு, கௌரவக் குறைவு, மாதர்நட்பு, குடும்பக்கவலை

**விருச்சிகம்**
மாணவர்கல்விச்சிறப்பு அற்பர்உறவு, முயற்சிதாமதம் தன்னம்பிக்கைக்குறைவு

**தனுசு**
வாக்குமேன்மை, பிரயாண சுகம், நல்லமுயற்சி, காரியஜெயம்

**மகரம்**
வாக்குக்கலகம், தனவிரயம், அமைதிக்குறைவு, காரிய தாமதம்

**கும்பம்**
தனவரவு, காரியஅனுகூலம் பெரியோர் மதிப்பு, உடல் நலம்

**மீனம்**
நித்திரைக்குறைவு, உணர்ச்சிவசப்படல், பிதா சிந்தை முயற்சிதாமதம்
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## கிராமஉத்தியோகத்தருக்கு கொடுப்பனவுதொகையை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படும்சைக்கிள் திருத்தக் கொடுப்பனவுத் தொகையை மூன்று மடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசசபை கிராமஉத்தியோகத்தர்சங்கம் புதிய அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

சைக்கிள் திருத்துவதற்காக நாற்பது வருடங்களாகஎழுபத்தைந்து ரூபாவே எமக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கிராம சேவையாளர்களின்பிரிவிலும்கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்குமாதம்ஒன்றுக்கு 225 ரூபா சைக்கிள் திருத்தக் கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

இது கிராம சேவகர்களுக்கு பாரபட்சம் காட்டும் ஒரு செயலாகும்.

இவ்வாறுதமது கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றினை பிரதமர் ரணில் விக்கிரயசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (செ)

## உதை பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையும் இறுதிப் போட்டியும்

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம், யாழ். உதைபந்தாட்டலீக்கின் அனுசரணையுடன் நாளையும், நாளை மறுதினமும் நடத்தவுள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர்களுக்கான பரீட்சை யாழ். மத்திய கல்லூரியிலும், சென். ஜோண்ஸ் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையை நடத்த இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இருந்து, சம்மேளன உபதலைவரும் வடக்கு-கிழக்கு உதைபந்தாட்ட அபிவிருத்தி பொறுப்பாளரும், நடுவர் பயிற்சி முகாம் ஒழுங்கு நடவடிக்கைக் குழு உப தலைவருமாகிய ஜே. எஸ். என். ஆனந்தராஜா, நடுவர் பயிற்சி முகாமின் நடுவர்கட்கான பயிற்றுவிற்பாளரும், எவ். ஐ. எவ்.ஏ நடுவருமாகிய முசின் ஆரில், நடுவர் பயிற்சி முகாமின் உதவியாளரும் எவ். ஐ. எவ். ஏ. நடுவருமாகிய முகமட் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8. 00 மணிக்கு உடற்தகுதிகாண் பரீட்சை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும், இதற்கு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்க நிர்வாகிகள் உதவி புரிவர்.

காலை 11. 00 மணிக்கு நடுவர்களுக்கான செயல்முறை விளக்கம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் முசின் ஆரில் மற்றும் முகமட் ஆகியோரால் செய்து காண்பிக்கப்படும். அத்துடன் பி. ப. 2. 00 மணியளவில் வீடியோ படமும் காண்பிக்கப்படும்.

மாலை5.00 மணிக்குயாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட விலகல்முறையிலான சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி யாழ். பல்கலைக்கழக அணிக்கும் நாவந்துறை சென் நீக்கிலஸ் அணிக்கும் இடையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறும்.

மீண்டும், சனிக்கிழமை காலை 9. 0 0 மணிக்கு யாழ். சென் ஜோண்ஸ் கலலூரியில் தரம் 1, 11, 111க்கான எழுத்து மூலப் பரீட்சை இடம்பெறும்.

இதில் உடற்தகுதிகாண் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் மட்டுமே எழுத்து மூலப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

மேற்படி உடற்தகுதிகாண் பரீட்சைககு யாழ். உதைபந்தாட்ட லீக்கில் இருக்தும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் இருந்தும் 100 பேர்வரை பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5-110)

## உழவு இயந்திர சில்லுக்குள் கால் சிக்கி படுகாயம்

(மந்திகை)

ஓடிக்கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்துஇறங்க முற்பட்டவேளை கால் சில்லினுள் அகப்பட்டு படுகாயமடைந்த ஒருவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலியைச் சேர்ந்த யோகதாசன் மரியதாஸ் (வயது 32)என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-23-4)

## கடிதம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் இருக்கும் 108 தமிழ்க் கைதிகள் பற்றிய விபரங்களை அறியத்தருவதோடு, அவர்கள் தமது பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ளவும்நீதிமன்ற சட்டத்தின் பிரகாரம் அவர்களை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் கையளித்த கடிதத்தில் கேட்டுள்ளது. (எ)

## தென்மராட்சி மக்கள் வீடு செல்லும்

# உரிமை மறுக்கப்பட்டால் உண்ணாவிரதம்

# இருக்கப்போவதாக ரவிராஜ் எம். பி சூளுரை

(தென்மராட்சி)

தனங்கிளப்பு, நாவற்குளி, மறவன் புலவு போன்ற கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்கள் தமது வீடுகளுக்குச்செல்ல அனுமதியளிக்கப்படல் வேண்டும்.

தவறும் பட்சத்தில் அம்மக்களுடன் சேர்ந்து நானும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவேன்.

இவ்வாறு தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் நேற்று முன்தினம் இணுவிலில் நடைபெற்ற தனங்கிளப்பு, நாவற்குளி, மறவன்புலவு மக்களுடனான கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

தனங்கிளப்பைச் சேர்ந்த சமூக சேவகர் எஸ். திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்திற்கு சுமார் 150க்கு மேற்பட்ட பொதுமக்கள் சமூகமளித்திருந்தனர்.

ரவிராஜ் எம். பி. அங்கு மேலும் தெரிவிக்கையில், அண்மையில் நான் கனடாவுக்குச் சென்றிருந்தசமயம் தென்மராட்சியில் அழிக்கப்பட்ட பல பகுதிகளின் புகைப்படங்களை அங்கு வாழ்கின்றதென்மராட்சிப் பிரமுகர்களுக்குக் காட்டியுள்ளேன்.

தென்மராட்சியின் புனரமைப்புப் பணிகளுக்கு அவர்கள் உதவிகள் வழங்குவதற்கு உறுதியளித்துள்ளனர்.

தனங்கிளப்பு, நாவற்குளி, மறவன் புலவு வாழ் மக்களின் விவசாய, கடற்றொழில்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டமை வேதனைப்படக்கூடியதே எனவும்சாவகச்சேரியில் பொதுச் சந்தையை படிப்படியாக அங்கு இயக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளமை பற்றியும் அவர் குறிப்பிட்டார். (உ-77)

## தவக்காலத் திருப்பாடல்கள் ஒலிநாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவால் 'தவக்காலத் திருப்பாடல்கள்' என்னும் இசை ஒலி நாடா ஒன்றுவெளியிடப்பட்டுள்ளது.

இதில் தவக்கால ஞாயிறு தினங்களில் பாடப்படவேண்டிய பதிலுரை சங்கீதங்கள் இலகு இசையில் அமைக்கப்பட்டுள்ளன. (செ)

## சீனாவால் இலங்கையும் நன்மையடைய வாய்ப்பு

(கொழும்பு)

சீனாவில் மேற்கொள்ளப்படும் விஞ்ஞானம் தொழில் நுட்பத்துறைகள் போன்ற அபிவிருத்திகள் காரணமாக இலங்கையும் நன்மையடையும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இராஜதந்திரஉறவு ஏற்படுத்தப்பட்டு 45 ஆண்டுகள் பூர்த்தியடைந்ததினத்தை முன்னிட்டு முத்திரை வெளியிட்டுப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சமய கலாசார அடிப்படையில் மாத்திரமன்றி20 நூற்றாண்டுகள் புராதனமானது.

சீனாவின் இவ்வாறான உறவு நிலைகளால் எதிர்காலத்தில் தொழில் நுட்பத் துறையில் இலங்கையும் முன்னேற்றமடையும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## புதிய அரசுக்கு ஒத்துழைக்க எதிர்க்கட்சியிடம்கோரிக்கை

(கொழும்பு)

போர்ச்சூழல் காரணமாக சீர்குலைந்து, பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளைமேற்கொண்டுள்ளபுதிய அரசிற்கு எதிர்க்கட்சி உதவி செய்ய வேண்டும் என அதன் தலைவரை அமைச்சர் ரவி கருணாநாயக்கா கேட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் 7 ஆண்டுகால ஆட்சிக் காலத்தின் போது ஏற்பட்ட நிர்வாக சீர்குலைவுகள் காரணமாகவே நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலைமுன்னணியும் பொதுஜன ஐக்கியமுன்னணியும் இணைந்து ஆட்சியமைத்த போது கைத்தொழில் துறைபொருளாதாரம்சம்பந்தமாக உரிய கொள்கைகள், திட்டமிடல்கள் என்பன கடைப் பிடிக்கவில்லை.

இதனால் திறந்தசந்தையில் பொருள்களின் விலையை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். உ-8)

## தப்பிஓடிய படையினருக்கு விசேட தொழிற்பயிற்சி

(கொழும்பு)

இராணுவத்தை விட்டுச் சென்றவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இராணுவத்தை விட்டுச் சென்றவர்களை நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடச் செய்வதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவித்த அமைச்சர், பாதுகாப்பு பிரிவிலிருந்து பலர் தப்பிச்செல்வதற்கான காரணங்கள் பற்றியும் ஆராயப்பட்டு, இவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்க ஏற்பட்ட செலவுகளை, தொழிற்பயிற்சியை அடுத்து வழங்கப்படும் தொழில் வாய்ப்பின்மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் நிவர்த்திசெய்ய முடியுமா எனவும் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-5)

## வீதித்தடை விவகாரம் அமைச்சர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

இராச வீதி - கோப்பாய் தெற்கு வீதித்தடை காரணமாக அனுபவித்து வரும் இன்னல்கள் குறித்து, பாதிக்கப்படும் மக்கள் அண்மையில் அமைச்சர் மகேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன்,

தமது நிலையை விளக்கி மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இவ் வீதியானது கடந்த இரண்டு வருடங்களாக பாதுகாப்புப் படையினரால் மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் இவ் வீதியால் அன்றாடம் பயணம் செய்யும் மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களினை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் விவசாயிகள தமது உற்பத்திப் பொருட்களை கல்வியங்காடு, திருநெல்வேலி சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கும் பால் உற்பத்திப் பொருட்களை பால்ப் பண்ணைக்குக் கொண்டு சென்று வருவதற்கும், அதனுடன் பாடசாலை மாணவர்கள், பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குச் செல்வோர் எனப் பல்வேறுபட்ட தரப்பினரும் இவ் வீதித் தடையால் பல்வேறுபட்ட சிரமங்களும் நீண்டதூரம் சுற்றிவர வேண்டிய தேவையும் உள்ளது.

மேலும் இ.போ.ச பேருந்து சேவையினை தற்போது இவ் வீதி வழியாகவும் விரிவு படுத்தியுள்ளதை தாங்கள் அறிவீர்கள். அத்துடன் கோப்பாய்க் காவல்த்துறைப் பணிமனையும் இவ் வீதியிலேயே உள்ளது.

எனவே மேற் கூறப்பட்டவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ் வீதியினை பயணிகளின் பாவனைக்குத் திறந்துவிடுவதற்குச் சம்மந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறி இப்பாதையைத் திறப்பதற்கு தங்களால் ஆன முயற்சியை இவ்விடயத்தில் எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உ)

## சிறுநீரக கழிவகற்றும் இயந்திரங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அமெரிக்காவிலுள்ளசர்வதேச லயன்ஸ் கிளப்பினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட,

6 மில்லியன் ரூபா பெறுமதியான 4 சிறுநீரக கழிவுஅகற்றும் இயந்திரங்கள்,

யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகை பணிப்பாளர் செல்வி நவமலரிடம் நேற்று சம்பிரதாயபூர்வமாக கையளித்தார். (உ-10-77-014)

## அனலைதீவுப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(ஊர்காவற்றுறை)

அனலைதீவுப் பகுதிப் பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதியிலுள்ள, வடலூர்அ.த.க. பாடசாலையில் 170 மாணவர்களுக்கு 2 ஆசிரியர்களும், அனலைதீவு தெற்கு அ.த.க பாடசாலையில் 122 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும், சதாசிவ மகா வித்தியாலயத்தில் 220 மாணவர்களுக்கு 5 ஆசிரியர்களும் கற்பித்து வருவதாகவும்,

இந் நிலையில் மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி கண்டு வருவதாகவும் பெற்றோர் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-75)

## ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு பணிப்பாளர் நிஹால் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் நிஹால் கருணாரத்தின நேற்று முன்தினம் காலை கண்டி மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 19ஆம் திகதி ஹங்குராம் பிட்டிபொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் குணவர்த்தன பண்டாரவை அச்சுறுத்தியதாக குற்றப் புலனாய்வு பிரிவினரால் கண்டி மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இவரை உடனடியாக ஆஜராகுமாறு கண்டிமஜிஸ்ரேட் நீதிவான் சி.வி ராஜபக்ஷ பிடிவிறாந்து பிறப்பித்தார்.

விசாரணையை மேற்கொண்ட நீதவான், இவரை ஒருலட்சம்ரூபாசரீரப் பிணையில் விடுதலை செய்ததுடன் மார்ச் மாதம் 27ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டுளளார்.

அத்துடன், இச்சம்பவத்துடன்தொடர்புடையஏனைய9 சந்தேக நபர்களை இம்மாதம் 25 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், மன்றில் ஆஜராகாத ஏனைய சந்தேக நபர்களான ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின்இன்ஸ்பெக்டர், மாகாணசபை உறுப்பினர், தனியார் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்களை மன்றில் ஆஜராகுமாறும்நீதிவான் மேலும் உத்தரவிட்டார். (ந-4)

## புதியதூதராக ஸ்ரெபான் அபன்ஸ் நியமிக்கப்படவுள்ளார்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய பிரித்தானியத் தூதுவராக ஸ்ரெபான் அபன்ஸ் நியமிக்கப்படவுள்ளார்.

தற்போது தூதராககடமையாற்றும் லின்டா டபீல்ட் தனது சேவைக் காலத்தை முடித்து நாடு திரும்பிய பின்னரே, புதிய தூதுவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுளளது. (செ

## சமூகச் சீர்குலைவுகளுக்குள்

# மாணவ சமுதாயம் ஆட்படாது காப்பது உத்தம ஆசிரியர்களின் உயரிய பணி

## யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் உரை

(அரியாலை)

இன்றைய சமூகச் சீர்குலைவுகள், பிறழ்வுகளுக்குமாணவ சமுதாயம் ஆட்படாத வகையில் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது.

சமூகப்பார்வையும், சமூகப் பிரக்ஞையும்உள்ள ஒவ்வோர் உத்தம ஆசிரியரின் கையிலும் இந்தப்பாரிய பணிஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசுத் தினம்நேற்று முன்தினம் இடம் பெற்ற போது, நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டுஉரையாற்றியயாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வராணிமகாலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒரு நாகரிக- பண்பாட்டு வரம்புக்குள்நின்றுவாழ்கின்ற சமுதாயம் தான்வளர்ச்சியடையும், வாழும்.

மற்றவை கால ஓட்டத்தில் தொலைந்து போகும்.

எனவே எமது தமிழ்ப்பண்பாடுநின்றுநிலைக்குமா? சுயம் இழந்து போகுமா?என்பதற்கு காலம் பதில் கூறவேண்டியதில்லை. ஆசிரியர்கள் தான் பதில்கூற வேண்டியவர்களாகின்றனர் அவர்கள் வழிப்படுத்தும் மாணவர்கள் தான் இதைத் தீர்மானிக்கப் போகின்றனர் என்று குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், வினைத்திறன் மிக்க கற்பித்தலை இன்றையசூழ்நிலையில் மாணவர்களுக்கு வழங்குவது கடினமான காரியம்.

ஆயினும் சீரிய வினைத்திறனை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் அனைவரும் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (உ-225)

# கலை உலகிற்காய் வாழ்வை அர்ப்பணித்து வில்லிசை வளர்த்த 'வானம்பாடி யோகராஜா'

ஈழத்தமிழினத்தின் கலை வடிவங்களில் ஒன்றான வில்லிசையை மெருகூட்டிய கலைஞர்களுள் ''வானம்பாடி யோகராஜா' முக்கியமானவர் இவரின் பிறந்த இடம் உடுப்பிட்டி எனினும் இவர் புகுந்த இடம் கரவெட்டியாகும். சிறு வயதிலிருந்தே கலையுலகில் நாட்டம் கொண்டு தனது இறுதி வாழ்வு வரை கலைக்காகவும், மாணவர்களின் கல்விநலனுக்காகவும் தன்னை அர்ப்பணித்தார். அவ்வாறான ஒருகலைஞனை, ஆசிரியனை, ஒருவழி காட்டியை நினைவு கூருவது சாலப்பொருத்தமாகும்.

பக்திப்பாடல்கள்

வில்லிசை என்றால் யோகராஜா, நடிப்பு என்றால் யோகராஜா, பக்தி இசை என்றால் போகராஜா, கணிதம் என்றால் யோகராஜா என்று அடுக்கிக்கொண்டு போகுமளவிற்கு தன்னை அர்ப்பணித்தவர் இக் கலைஞன். வில்லிசைக் கலை ஈழத்தமிழினத்தின் பாரம்பரியக்கலை அந்தக் கலையைத் தேர்ந்தெடுத்து மக்களை நல்வழிப்படுத்தும் உணர்வுகளைக் கதையாக்கி மேடைகள் தோறும் வானம் பாடி என்ற பெயரில் அரங்கேறியவர். வில்லிசையை மெருகூட்ட ஆரம்பத்தில் பக்திப் பாடல்கள் பாடுவது இவர் வழமை யோகராஜாவின் பக்திப்படலுக்கென்றேதனியான ரசிகர்கூட்டம்அலைமோதும். ''முருகா'' என்று உயர்ந்தஸ்தாயியில் பண்ணோடுஅழைக்கும் போது மக்கள் கூட்டம் ஆனந்தக்கண்ணீர் வடிக்கும். ''சங்கேமுழங்கு'' என்று தமிழினத்துக்குப் புரட்சிகவிஞராகப் பாடவும் அவர் தவறவில்லை. ஒருமுறை சீர்காழி எஸ்.கோவிந்தராஜன் யாழ்ப்பாணம் வந்தபோது அவரைச் சந்தித்து அவரை ஒத்த குரலில் பாடிக்காட்டிபுகழ் பெற்றதை வாழும் வரை பெருமையாக கொண்ட கலைஞன் வானம்பாடிகோயிலில் விழாக்கள் என்றால்வானம்பாடியை நோக்கி மக்கள்வெள்ளம் அப்படி ஒரு சிறந்த கலைஞன் வில்லிசைக்கும் போது வரும் நகைச்சுவைகள் அவருக்கே உரிய தனிப்பாணி, நாட்டில் நடைபெறும் சமகாலநடத்தைகளை நகைச்சுவையாக்கி, வில்லிசையுடன் இணைப்பார். நாட்டுப்பற்றுக் கொண்ட இவர் சமகால நிகழ்வுகளை கதையாக்கி அதை வில்லிசைத்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு அவர் கூறிய செய்திகளோ பலப்பல, அவை என்றும் நீங்காத நினைவுச் சுவடுகள்.

மக்கள் மனதில் படிந்தவை

பள்ளிப் பருவம் முதல்நாடகம் ஆக்கி நடித்து வந்த கலைஞன் வானம்பாடி. அவ்வக் காலப் பகுதிக்குரிய சமுதாய குண நலன்களையே நாடகமாக்குவார். 'அணையா தீபம்' 'கலை வடித்த கண்ணீர்' போன்ற நாடகங்கள் என்றும் மக்கள் மனதில்படிந்தவை, தனி நடிப்பில் நவரசங்களை முகபாவனூடாக வெளிப்படுத்தும் இவர் ஒரு சிறந்தஅறிவிப்பாளர்சபைக்கு ஏற்ற வகையில்நிகழ்வுகளைத் தொகுத்தளிப்பார்.

இவற்றுடன் மட்டுமல்லாது எமது யாழ்ப்பாணத்து மண் வாசனையில் ஏறு கதைகள், சமய ஆக்கங்கள் போன்றவற்றை எழுதிஎமது சமுதாயத் தேவைகளை இனங்கண்டு கொண்டவர் வானம் பாடி யோகராஜா.

ஆர். ராஜ்
கரணவாய்

## மறைந்தார் மாண்பு

கணிதமாணவர்கள்

இவ்விதமாக எம் தமிழ் மக்களின் இன்னல்களை இனங்கண்டு சேவையாற்றியது மட்டுமல்லாமல், கணிதம் கடினம் என்ற மாணவர்களைக் கை தூக்கி வைத்த பேராசான் வானம் பாடியோகராஜ். மேலும் பாடசாலை மாணவர்களுக்குச் சமயப்பற்றை வளர்ப்பதற்கும்.ஒழுக்க விழுமியங்களைப்பேணவும், அரும்பாடுபட்டவர். மாணவர்களிணூடாகத் தனது கலையையும்,பேச்சு,கவிதை, கட்டுரை போன்ற அம்சங்களையும் வளர்த்தவர். இறுதி மூச்சு வரையும்அவரின் விருப்பம் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கலைஞர் கௌரவிப்பில் தனது வில்லிசைக் கலைக்காக,தானும் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதே அவரின் எண்ணம் இனியும் நிறைவேறலாம். அத்துடன் அவர் தன்கலையை தன் மகனுக்கும் கொடுக்கத்தவறவில்லை. அந்த மகனைக் கலை உலகிற்காக நாம் எல்லோரும் வளர்த்தெடுக்க வேண்டும். வானம் பாடியின் பெயரால் அவரைவளர்த்தெடுக்கவேண்டும்.மேலும் கலையுலக வாழ்விற்காய் தன்னையே அர்ப்பணித்த அந்த வானம் பாடி யோகராஜின் பெயரில் ஒத்திசைவுச் சபை அமைக்க வேண்டும். அதன் மூலம் அந்த வானம் பாடி எவற்றையெல்லாம் மக்களுக்காய் செய்ய நினைத்தாரோ எவற்றையெல்லாம்மக்களுக்காய் செய்தாரோ அவையெல்லாவற்றையும்முன்னெடுக்க வேண்டும். இது இச உள்ளங்களின் ஆதங்கம். இப்படியாக வானம்பாடிஎன்றால் போகராஜா, யோக ராஜா என்றால்வானம் பாடியே என்றுமக்களின்மனங்களில்உறைந்துவிட்ட அவரை நினைவு கூருவோம்.

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

உடுவில்பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய்த் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று காலை 8.30-9.30 மணி வரை இணுவில் மானிப்பாய் வீதியிலுள்ள வாசிகசாலையிலும், 9.45-10.45 மணி வரை பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடியிலும், மு.ப.11.00-12.00 மணி வரை வட்டுவினிச்சந்தியிலும், பி.ப.12.15-1.15 மணிவரை இணுவில் மேற்கு,ஞானவைரவர் கோயிலடியிலும்,பி.ப 2.00-3.00 மணிவரை இணுவில் தெற்குராசாகடையடியிலும்,பி.ப.3.15-4.15 மணி வரைபருத்தியடைப்பு பிள்ளையார் கோவிலடியிலும் இடம் பெறும். (செ)

## பிரதமர் சிங்கப்பூரில்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின் சிங்கப்பூர் பயணத்தின்போது அங்குதங்கி வாழும் ஆசிய நாட்டவர்களின் முக்கிய வர்த்தகப்பிரமுகர்களைச் சந்தித்து இலங்கையின் வர்த்தகம்,முதலீடு தொடர்பான பேச்சுவார்த்தைகளைநடத்தவுள்ளார் எனவும்,

சிங்க்ப்பூர் பிரதமர்உட்பட சிங்கப்பூர் வர்த்தகர்களிடம் இலங்கை முதலீட்டு வசதிகள் போன்றவை தொடர்பாக எடுத்து விளக்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமருடன் அமைச்சர்களானஜி.எல்'பீரிஸ்மெலிந்த மொறகொட ஆகியோரும் சிங்கப்பூர் சென்றுள்ளனர். (உ.8)

## ஆயுதங்களைக் களைய ஐ. நா.வின் உதவி அரசு கோரியது

(கொழும்பு)

நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருக்கும் அரசியல் வாதிகள் உட்பட அனைத்து சட்டவிரோத கும்பல்களிடமிருந்தும் அவற்றை களைவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை அரசாங்கம் கோரியுள்ளது.

தற்போது கொழும்பு வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப்பரிகரணக்குழுவிடம் இந்த உதவிகோரப்பட்டுள்ளதாக உள்த்துறை அமச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு உட்பட யுத்தம் நடைபெறும் பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களில் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் மீது இக்குழு விசாரணைகளை மேற்கொளவுளது.

இராணுவத்தை விட்டு தப்பி ஓடியவர்களிடம் சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் உள்ளன. அத்துடன் கறுப்புச் சந்தையிலும் ஆயுதங்கள் தாராளமாக கிடைக்கின்றன.

இம்மாதம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்கும் இக்குழுவினர்,

மேற்படி குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்குப் புதிய வழிமுறைகளை வகுக்கவுளதாகவும் உள்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் பழைய பாடத்திட்ட எச். என்.டி. சி, மற்றும் எச். என். டி.ஏ.கற்கை நெறிகளின் II,III ஆம் வருட மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் மார்ச்மாதம் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட மாணவர்களை உடன் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு இயக்குநர் வி. கருணாகரன் அறிவித்துள்ளார். (உ)

## மத்திய கிழக்கிற்கு செல்வோருக்கு விமானப் பயணக்கட்டணம் உடனடியாக குறைப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்வோருக்கான விமானப்பயணச் சீட்டுக்கட்டணத்தை உடனடியாக குறைக்க இலங்கை விமான சேவை இணக்கம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இருந்த கட்டணத்திலும் பார்க்க 20-30 வீதம் வரை குறைக்கப்படவுள்ளதாக வேலைவாய்ப்பு தொழில்அமைச்சுவிடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஏனைய விமான சேவை நிறுவனங்களும் தமது விமானப் பயணக் கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளன. (செ)

## நட்புறவுப் பாடசாலை திட்டம் இன்றுமுதல்அமுல்

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு புதிய கல்விக் கோட்பாட்டிற்கமைய நட்புறவுப் பாடசாலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் இன்றுமுதல் அமுல்படுத்தப் படவுளது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தமிழ், சிங்கள மொழி மூலமான பாடசாலைகளில் ஆண்டு ஆறு தொடக்கம் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன. (செ)

## வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு உதவியாளர் அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வீதி வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்பு உதவியாளர்களாக முன்பு பணியாற்றியவர்கள் தாம் இப்போது எத்தகைய தொழிலும் இல்லாது கஷ்டங்களின் மத்தியில் வாழ்வதாகவும்,தமது முன்னைய உத்தியோகத்திற்குப் பதிலாக தமக்கு வேறு உத்தியோகம் வழங்குமாறும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர். ஜயலத் ஜெயவர்த்தனாவை கோரியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு

வீதி வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்பு உதவியாளர் பதவிக்குத்தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியின் பின் நாம் திறம்படக் கடமையாற்றி வந்தோம்.

துரதிர்ஷ்டவசமாக எமது அணியைச் சேர்ந்த எஸ்.விமலேஸ்வரன் கடமையில்ஈடுபட்டிருந்த போது சுடப்பட்டதை தொடர்ந்து அக்கடமையை நிறுத்தி விட்டோம்.

இக்கடமையில் ஈடுபட்ட எமது அணியினர் பெரும்பாலானோர் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் அனைவரும் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.எனவேஎமக்கு வேறு உத்தியோகம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். (எ)

## தபால் மூலவாக்களிப்பில் கைதிகளுக்கு இடமுண்டா?

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு சட்டத்தில் வழிமுறைகள் உள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்துவருவதாக உள்விவகார அமைச்சர் ஜோன்அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளதாக கைதிகள் தெரிவித்தனதயடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இது குறித்துபேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும்பிரதேச வாக்காளர் அட்டையில் பதியப்பட்டுள்ள அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை இருப்பதால் கைதிகளின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுளதாகவும் தெரிவித்தார்.

எனினும்இவ்விடயம் நடைமுறைக்குகொண்டுவரப் பட்டால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு சிரமம் ஏற்படும் என்பதால் இதனை நிறைவேற்றுவதில் பலசிக்கல்கள் ஏற்படலாமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## விமான நிலையத்தில் சீன நிறுவனத்தினால் புதிய எண்ணெய்த் தாங்கி

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சீன நிறுவனம் ஒன்று புதிய எண்ணெய் தாங்கிகளை அமைத்து வருகின்றது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இவ்வேலைகளை சீனாவின் சர்வதேச இரசாயன பொருளியல் கூட்டுத் தாபனம் 45 இலட்சம் டொலர் செலவில் மேற்கொண்டு வருகிறது.

இத் தாங்கிகளை, தாக்குதல்களுக்கு நின்றுபிடிக்கக் கூடிய வகையிலும் உயர்மட்ட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாக தெரிவிக்கப் படுகிறது. (உ-8)

## கலாசாலைஅணி வெற்றிவாகை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டியில் பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலை அணி வெற்றியீட்டியது. (உ-19)

## இன்று ஒரு தகவல்

# பத்திரிகை ஆசிரியரின் சுதந்திரப் போர்

1919 ஏப்ரல் 13ந் திகதி. அன்றுதான் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடைபெற்றது. அப்பாவிகளான சனக்கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, ஏராளமானவர்களைக் கொன்று குவித்தனர் வெள்ளையர்கள். இந்தப் படுகொலை பற்றிய உண்மைச் செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாது என்று, அரசு தணிக்கை முறைகளைக் கையாண்டது. ஆனால், ஹார்னிமன் என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'பம்பாய் கிராணிகள்' பத்திரிகை, ஜலியன் வாலாபாக் படுகொலையை வன்மையாகக் கண்டித்ததுடன், உண்மைச் செய்திகளைச் சேகரித்து வெளியிட்டு வந்தது.

யார் இந்த ஹார்னிமன்? அயர்லாந்து நாட்டுக்காரர். சிறந்த எழுத்தாளர். ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களிலும் நடித்திருக்கிறார். பத்திரிகை நிருபராகப் பணியாற்றியிருக்கிறார். 1906இல் இவர் இந்தியாவிற்கு வந்தார். கல்விகத்தாவில் 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையில் உதவியாசிரியராகச் சேர்ந்தார். இவர் திறமையை அறிந்த கோகலே, பிரோஸ்ஷா மேத்தாஎன்பவர் ஆரம்பித்த 'பம்பாய் கிராணிகள்' ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆசிரியராகக் ஹார்னிமனைச் சிபார்சு செய்தார்.

ஹார்னிமன் 'ஹோம்ரூல்' இயக்கத்தின் உபதலைவராக இருந்து இந்தியர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டார். ஜாலியன் வாலாபாக் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்துஎழுதினார். அவரை நாடுகடத்த உத்தரவு பிறப்பித்தனர் ஆங்கிலேயர். உடல் நலமில்லாத நிலையில் அவர் இந்தியாவைவிட்டு வெளியேறினார். 'பம்பாய் கிராணிகள்' ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி இச்சமயத்தில் காந்திஜி கேட்டுக்கொள்ளப் பட்டார். அவர் இப்பொறுப்பை ஏற்குமுன், அப்பத்திரிகையை மூடும்படி அரசாங்கம் உத்தரவிட்டது.

சில ஆண்டுகள் கழித்து ஹார்னிமன் மீண்டும் இந்தியாவிற்கு வந்து 'இந்தியன் நேஷனல் ஹெரால்டு' என்ற புதுப்பத்திரிகையொன்றை ஆரம்பித்தார். 1944 ஒக்டோபர் மாதத்துடன், ஹார்னிமன் பத்திரிகைத் தொழிலில் சேர்ந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாயின. 1948, ஒக்டோபர் 16ந் திகதி பம்பாய் நகரில் நர்ஸிங்ஹோம் ஒன்றில் அவர் காலமானார். ஸிவ்ரி இடுகாட்டில் அவர் புதைக்கப்பட்ட கல்லறை இருக்கிறது. ஆனால், அதன் மீது அவருடைய சிறப்புக்களை அறிவிக்கும் கல்வெட்டு இல்லாதது மிகவும் ஏமாற்றமாக இருக்கிறது. □

கஜன்

நன்றி
ஆனந்தவிகடன் ,69

# காதலர்தின கொண்டாட்டத்திற்கு தேரர்கள் தரப்பிலும் எதிர்ப்பு

(கொழும்பு)

கடந்த 2 ஆயிரத்து 500 ஆண்டுகளாக இலங்கை மக்களின் உள, ஆன்மீக சம நிலைகளை நன்கு பேணுவதற்கு உதவிய பாரம்பரிய கலாசாரங்களை தொடர்ந்து பேணுவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளும் கடிதமொன்றை, அஸ்கிரிய மகாநாயக்கதேரர் உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரர், அமரபுர நிக்காயவைச் சேர்ந்த புஞ்ஞசார மகாநாயக்க தேரர், ராமன்னா நிக்காயவைச் சேர்ந்த வெவெலதெனிய மைதலங்கார மகாநாயக்க தேரர் ஆகியோர் அனுப்பி வைத்துள்ளனர்.

மோசடிக் காரர்களான தொழில் முயற்சியாளர்கள் மற்றும் அவர்களின் செல்வாக்குகளுக்குட்பட்ட ஊடகப்பகுதி ஆகியன விலைமதிப்பற்ற எமது கலாசாரத்தை அழித்து விடப்பார்க்கின்றன.

பெப்ரவரி 14 ஆம் திகதி பாடசாலை சிறுவர் சிறுமியரை காதலர் தினம் கொண்டாட வைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதனால் பாடசாலைகளின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை பேண முடியாமற் போகும் என்று அதிபர்கள் முறையிடுகின்றார்கள் எனவும், இதுவிடயத்தில் உடன் நடவடிக்கையெடுக்குமாறும் தேரர்கள் மேலும் கேட்டுள்ளனர். (உ)

## எக்ஸ்போ கண்காட்சி

(கொழும்பு)

இவ்வருடம் நவம்பர் மாதத்தில் 'எக்ஸ்போ' கண்காட்சி இடம்பெறுவதற்கான விரிவான ஒழுங்குகளை வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணா நாயக்க மேற்கொண்டு வருகின்றார்.

சிறியமற்றும்நடுத்தர ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 50 ஆயிரம் சதுரஅடி பரப்பில் இக்கண்காட்சி அமையவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## ஊடகவியலாளர் சங்கம் ஜயலத்திற்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜனைக் கொலைசெய்தவர்களைக் கைதுசெய்து நீதிமன்றின் ஊடாக தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிற்கு கடந்த 12 ஆம் திகதி எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையிலுள்ள சகல ஊடகவியலாளர்கள், செய்திப்பத்திரிகை வெளியிட்டாளர்கள், விசேடமாக வடக்கு-கிழக்கில் யுத்த சூழ்நிலையில் இத்துறையில் கடமையாற்றுவோர் அனைவரும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் செயற்படுவதற்கு வழிவகுக்க வேண்டும்.

வடபகுதி ஊடகவியலாளர் தென்பகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் வடபகுதி மக்களின் எண்ணக் கருத்துகளை அவர்களுக்கு விளங்கப்படுத்துவதற்கும் சகல வசதிகளையும் வழங்கவேண்டும்என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## பயன்தரு மரங்கள் அழிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் பெருமளவு பயன்தரு மரங்கள் தறிக்கப்படுவதாக அப்பகுதி மக்களால் புகார் தெரிவிக்கப்படுறது.

விறகுத் தேவைக்காக யாழ்ப்பாணம் எடுத்து வரும் வகையிலேயே இவ்வாறு மரங்கள் தறிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. (உ-75)

## இருசில்லு உழவு இயந்திரம் பாலத்தினுள் பாய்ந்தது

(சண்டிலிப்பாய்)

வீதியால் சென்றுகொண்டிருந்த இரு சில்லு உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்ததில் பாலத்தினுள் பாய்ந்தது.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமைஅளவெட்டி அலுக்காய் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

வீதிக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த தடுப்பு சுவரையும் இடித்துக்கொண்டு மேற்படி உழவு இயந்திரம் பாலத்தினுள் வீழ்ந்தது எனினும் உழவுஇயந்திரப் பெட்டி பாலத்தினுள் விழாததனால் தெய்வாதீனமாக ஒருவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

பின்னர் அயலில் உள்ளவர்களின் உதவியுடன் பாலத்தினுள் வீழ்ந்த இருசில்லு இயந்திரம் மீட்கப்பட்டது. (செ-5-125)

## வகுப்புக்கள் வழமைபோல்

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்சங்கத்தால்நடத்தப்பட்டுவரும் மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்கள் வழமைபோன்று எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுளளது.

இலங்கை கிரிக் கெட்கட்டுப்பாட்டுச் சபையினால்ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்கான விசேட சுழற்பந்துப் பயிற்சியை முடித்துக் கொண்டு யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் கே.சண்முகலிங்கம் கொழும்பிலிருந்து யாழ்.திரும்பியதை அடுத்து கிரிக்கெட் பயிற்சிகள் வழமை போன்று இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-217)

## செயலக கூட்டத்தில் அமைச்சர் மகேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தலைமையில் யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை.

யாழ். மாவட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் மாவை சேனாதிராஜா, என். ரவிராஜ், என். கே. சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் எஸ். கந்தையன் ஆகியோருடன் திணைக்கள தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ)

## தேசிய பாடசாலைகளில் வங்கிகள் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் நாட்டிலுள்ள அனைத்து தேசிய பாடசாலைகளிலும் வங்கிகள் அமைக்கப்படவுள்ளதாக மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அமைச்சு அறிவித்துள்ளது.

அரசின் 100நாள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 250 தேசிய பாடசாலைகளில் இந்த வங்கிகள் அமைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ- 5)

## ஒப்படைக்கத் தவறிய 1500 வாகனங்களை மீளப்பெற நடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் உபயோகித்த ஆயிரத்து 500 இற்கும் அதிகமான வாகனங்கள் திருப்பி ஒப்படைக்கப்படாமையை அடுத்து அவற்றை மீளப்பெற நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுதொடர்பாக ஆராய்ந்து மீளப்பெறத் தேவையான நடவடிக்கை எடுக்க பிரதமர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

நீதிசட்டச் சீரமைப்பு இனஒருமைப்பாட்டு புத்த சாசன அமைச்சர் பி.ஐ.மு. லொக்கு பண்டார பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ. எச். எம்.அஸ்வர், உள்நாட்டு அலுவல்கள அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர்இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, மேற்படிஒப்படைக்கப்படாதவாகனங்கள் மற்றும் சொத்துக்களுக்குமுன்னாள் அமைச்சர்களின் செயலாளர்கள் கணக்காளர்களே பொறுப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அநாதரவான நிலையில் வயோதிபரின் சடலம்

(கல்வியங்காடு)

கல்வியங்காடு மூன்றாம்கட்டைப் பகுதியிலுள்ள கடையொன்றின் முன்பாக நேற்று முன்தினம் காலை அநாதரவான நிலையில் சுமார் 75 வயது மதிக்கத்தக்க வயோதிபரின் சடலம் காணப்பட்டு அயலவர்களினால் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

வடமராட்சி துன்னாலைப் பகுதியைச்சேர்ந்த இவ்வயோதிபர் அண்மைக்காலமாக கல்வியங்காடு ஆனந்தபுரம் பகுதியில்வசித்துவந்ததாக தெரிவிக்கப்படுகிறது

(உ-245-4)

## அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பாக உள்ளூராட்சி தேர்தல் சீர்திருத்த சட்டமூலம், அரசியல் யாப்புக்கு ஏற்புடையதா என்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

இந்த அறிக்கையை 24 மணி நேரத்திற்குள் சமர்ப்பிக்குமாறும் உயர்நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

உயர் நீதிமன்றம் இந்த அறிக்கையை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கவுள்ளது.(வ)

## பத்திரிகையியல் பயிற்சிப் பட்டறை

(ஈச்சமோட்டை)

யாழ். மறைமாவட்ட பாதுகாவலன்பத்திரிகையும்சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்தும் 'ஊடகவியலுக்குஓர்அறிமுகம் எனும் பத்திரிகையியல் பயிற்சிப் பட்டறை நாளை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை மறைக்கல்வி நடுநிலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பத்திரிகையியலில் செய்திகள், ஆசிரியர் தலையங்கங்கள் எழுதும் முறை, திரைக்கதை ஆக்கம், திரைப்பட திரை இசை பற்றிய பல விடயங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இணைந்து பயன்பெற விரும்புவோர் தமது பெயர்களை பாதுகாவலன் பணிமனையுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறும் இதற்கான கட்டணமாக 50ரூபா அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது ,(உ- 59)

## சிந்தனைக்கு விருந்து

**தூண்டுவதோ மாலின் தொழில்?**

பூபாரம் தீர்க்கப் புரிந்தான் புயல்வண்ணன்
பாபாத்மாக் கள்நிறைந்த பாரிடத்தே - பூபாரம்
மீண்டும் தலையெடுக்க மேலிருந்து பார்ப்பதுடன்
தூண்டுவதோ அன்னான் தொழில்?

'பழையவன்'

## ஆப்கானிஸ்தான் நாட்டு
# பழங்குடி இனத் தளபதிகளிடையே
# மோதல் வெடிக்கும் அபாயம்

(காபூல்)

ஆப்கானின் பழங்குடி இனத் தளபதிகள் மத்தியில் புதிதாக மோதல் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட அந்த நாட்டின் இடைக்கால அரசாங்கம் புதிய நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆப்கானின் கிழக்குப் பகுதி நகரான பக்தியாவின் முன்னாள் ஆளுநர் தான் இழந்த பகுதிகளை மீண்டும், படை பலத்தைப் பயன்படுத்தி கைப்பற்றப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

பக்தியாவின் தலைநகர் கார்டெஸை கடந்தவாரம் வேறு ஒரு குழுவினர் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கோஸ்ட் பகுதியைச் சேர்ந்த முக்கிய தளபதி ஒருவர் அந்தப் பகுதியின் ஆளுநராக வேறு ஒருவரை நியமிக்குமாறு இடைக்கால ஜனாதிபதி ஹமீத் ஹர்சரியைக் கேட்டுள்ளார்.

அத்துடன், தற்போது ஆளுநராக உள்ளவரை மாற்றாவிடில் பக்தியா போன்று கோஸ்டிலும் வன்முறை வெடிக்கலாம் என அவர் எச்சரித்துள்ளார். (உ)

# உலக தரிசனம்

## ஆப்கானை விட்டுதப்பியோடிய தலிபான்கள் அணிதிரள்கின்றனர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானை விட்டுத் தப்பிச்சென்ற தலிபான் உறுப்பினர்கள்மீண்டும் அணிதிரண்டுவருவதாக அந்நாட்டின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தாக்குதலையடுத்து ஆப்கானை விட்டுத் தப்பியோடிய தலிபான் உறுப்பினர்கள் மீண்டும் அணிதிரண்டு இரு குழுக்களாகச் செயற்பட்டு வருவதாகவும்'

இவர்களில் அனேகமானவர்கள் அயல் நாடான பாகிஸ்தானில் இருந்தே ஆப்கானின் இடைக்கால அரசிற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் சிலர் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து 50 பேர்கொண்ட அமெரிக்க விசேட படையணியொன்று அவ்விடத்தில்தாக்குதல்நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். (உ)

# இந்திய-பாகிஸ்தான் பிரச்சினை தீர மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை

## பர்வேஷ் முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை முடிவிற்கு கொண்டுவர மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவைஎன பாகிஸ்தான்ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தியா கடந்த ஜனவரி நடத்திய ஏவுகணைச் சோதனையின்போது அணுவாயுத பரீட்சார்த்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதுஎனவும் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவித்துள்ள இந்த விடயங்கள் எந்தவிதமான ஆதாரங்களுமற்றவைஎன அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதுடன்,

இந்திய-பாகிஸ்தானிய விவகாரத்திற்கு தீர்வுகாண அமெரிக்கா உதவிவழங்கத் தயாராகவுள்ளதாகவும் அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## தடுப்பு முகாமைப் பார்க்க அவுஸ்திரேலியா அனுமதி

(கன்பெரா)

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை அவுஸ்திரேலியா தடுத்து வைத்துள்ள வூமெரா தடுப்பு முகாமிற்கு,ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் மேரி றொபின்சனின் பிரதிநிதிவிஜயம் மேற்கொள்ளவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தினால் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள வூமெரா முகாமைப் பார்வையிடுவதற்கு தனது பிரதிநிதியொருவரிற்கு அனுமதி வழங்க வேண்டுமென மேரி றொபின்சன் கடந்தவாரம் அவுஸ்திரேலியாவைக் கேட்டிருந்தார்.

முதலில் இதற்குத் தயக்கம் வெளியிட்டிருந்த போதிலும் பின்னர் இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (உ)

### சிறுவரை யுத்தத்தில் ஈடுபடுத்துவதை தடுக்க
## சர்வதேச நடவடிக்கை ஜெனீவாவில் ஆரம்பம்

(லண்டன்)

சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவதனை தடைசெய்ய சர்வதேச நடவடிக்கை ஒன்று நேற்று முன்தினம் ஜெனீவாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பதினெட்டு வயதிற்கு குறைந்தவர்களை இராணுவத்தில் இணைப்பதை முற்றாகத் தடைசெய்வதே இந் நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

சிறுவர்களை இராணுவத்தில் இணைப்போரை இனங்கண்டு அவர்களை தனிமைப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி ஒலாரா ஒட்டுணு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கை ஒன்று ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

### விளையாட்டு
## போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகள் வரிசையில்,

கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/யூனியன் கல்லூரியிலும்,

வலைப்பந்தாட்டப் போட்டி அதே தினம் பி.ப. 3.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (உ-19)

### ஜெயரெட்ணசிங்கம்
## ஞாபகார்த்த கிரி.போட்டி

(வல்வெட்டித்துறை)

யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகம் வி.டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 50 பந்துபரிமாற்றங்களை கொண்ட மாபெரும் கிரிக்கெற் சுற்றுப் போட்டியினை இவ்வாண்டு முதல் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளது.

இம்மாபெரும் சுற்றுப் போட்டியானது மார்ச்மாதம் முதல் வாரம் ஆரம்பமாகவுள்ளது. (உ-217)

## அணுஉலைகளின்பாதுகாப்பு தீவிரப்படுத்தப்படவுள்ளன

வாஷிங்டன்)

அமெரிக்காவில்உள்ள அணு உலைகளின் பாதுகாப்புக்கள் மேலும் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

அணு உலைகளின்மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளமையே இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டமைக்கு காரணமாகும்.

அமெரிக்காவில் நூற்றிமூன்று அணு உலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மாக்கிரெட்டின் இறுதிக் கிரியைகள் வெள்ளியன்று

(லண்டன்)

பிரிட்டிஷ் மகாராணியார் இரண்டாம் எலிசபெத்தின் தங்கையான இளவரசி மாக்கிரெட்டின் இறுதிக்கிரியைகள் நாளை இடம்பெறவுள்ளன.

கடந்த சனிக்கிழமை காலமான இளவரசியின் இறுதிக் கிரியைகள் அரச நிகழ்வாக அன்றி அரசகுடும்பத்தினர் மாத்திரம் கலந்துகொள்ளும் நிகழ்வாக இடம்பெறுமென பக்கிங்ஹாம் மாளிகைவட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மகாராணியின்தங்கையான இளவரசி மாக்கிரெட் (வயது-71) சிறந்த அழகியெனப் பாராட்டுப் பெற்றபோதிலும் காதல் விவகாரம்மற்றும் உடல்நலக்குறைவினால் அவரது தனிப்பட்ட வாழ்வு சோபிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அமெரிக்க விமானம் விபத்தில் சிக்கியது
### ஆப்கானில் சம்பவம்

(காபூல்)

அமெரிக்கவிமானப்படைக்கு சொந்தமான சரக்குவிமானம் ஒன்று, ஆப்கானிஸ்தானில் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 8 பேர் காயமடைந்தனர்எனதெரிவிக்கப்படுகிறது.

நேற்று இடம் பெற்ற இவ் விமான விபத்துதொடர்பான காரணங்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லையென அமெரிக்க விமானப்படைஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-8)

## கொலம்பிய அரசு மீது சட்டமா அதிபர் அதிருப்தி

(இலண்டன்)

கொலம்பிய அரசு இடதுசாரித்தீவிரவாதிகளுடன்நடத்தும் பேச்சுக்கள் குறித்து அந்நாட்டு சட்டமா அதிபர் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் தாக்குதலை நிறுத்தாத வரையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவது கூடாது,

அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்துவதாயின் அதுகுறித்து மக்களிடையே பொது வாக்கெடுப்புஒன்றைநடத்த வேண்டும் எனவும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ)


### விளையாட்டு செய்திகள்


## குளிர்கால ஒலிம்பிக் அமெரிக்காவும் ஜேர்மனும் முன்னணியில்

(லண்டன்)

சோல்வேக் சிற்றியில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்காவும், ஜேர்மனும் முதலிடத்தில் உள்ளன.

நான்கு நாள் முடிவில் அமெரிக்காவும், ஜேர்மனும் 6 பதக்கங்களை வென்றுள்ளன.

இரண்டாவது இடத்தில் நேர்வேயும், மூன்றாவது இடத்தில் இத்தாலியும் உள்ளன.

மேலும் இக் குளிர்கால ஒலிம்பிக் போட்டியினை பெரும் திரளான மக்கள் கண்டு களிப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5-10)

### கூடைப்பந்தாட்ட
## இறுதி ஆட்டங்களை யாழில் நடத்த முயற்சி

(வல்வெட்டித்துறை)

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கங்களுக்கிடையில் தேசிய ரீதியாக நடத்தவுள்ளகூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் அரை இறுதி, இறுதி ஆட்டங்களை அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

இப்போட்டிகளை நடத்துவதற்கான மைதானங்கள், வெளிமாவட்ட வீரர்கள் முகாமையாளர்கள் ஒழுங்கமைப்பாளர்களுக்கான போக்குவரத்துகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (உ-5-217)

## பரீட்சைப் பெறுபேறு வெளியாகியது

(கொக்குவில்)

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சினால் புதிய பாடத்திட்டப்படி தரம் 9 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாகாணமட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. (உ-243)

தெரிதலும் தேர்ந்துசெயலும் ஒரு தலையாச்
சொல்லலும்வல்லதுஅமைச்சு
- குறள்

# வலம்புரி

## வெளிப்பட்ட உண்மை !

யாழ். மாவட்டத்தில் பொருட்களின் விலை யேற்றத்திற்கு அடிப் படைக் காரணம் என்ன என்பதை யாழ் செயலகத்தில் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தலைமையில் கடந்த 12 ந் திகதி நடைபெற்ற விசேடமாநாட்டில் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.என்.ரவிராஜ் அவர்கள் துலாம்பரமாக எடுத்துக்கூறியுள்ளார்.

யாழ் குடாநாட்டுக்குத் தேவையான பொருட்களை எடுத்து வருவதில் கப்பல் கம்பனி வகிக்கும் ஏகபோக உரிமையும், பொருட்களை எடுத்து வருவதில் ஒரு சில வர்த்தகர்கள் ஆதிக்கம் செலுத்துவதும் பொருட்களின் விலை உயர்வுக்கு காரணம் என்ற உண்மையை ஒழிப்பு மறைப்பின்றி ரவிராஜ் எம்.பி அமைச்சர் ஜயலத் முன்னிலையில் வெளிப்படுத்தியுள்ளார்.

குடாநாட்டிற்கான உணவுப் பொருட்களைக் கொண்டுவருவதில்கப்பல் கம்பனி ஏகபோக உரிமையை வகிப்பதனால் நினைத்த பாட்டில் கட்டணங்களை நிர்ணயிப்பதைக் காணமுடிகிறது. வர்த்தகர்களும் பொருட்களை விரைவாகக் கொண்டு செல்லவேண்டுமென்ற நோக்கிலும், கப்பல் கட்டணம் உயர்ந்தால் என்ன? அதன் சுமையை பொருட்களின்விலையூடாக நுகர்வோனின் தலையில்சுமத்திவிடலாம் என்ற துணிவிலும் அது விடயத்தில் வர்த்தகர்கள் அதிகம்அலட்டிக்கொள்வதில்லை. இதனால் கப்பல் கட்டணம் ஓர் வரையறையின்றி உயர்ந்து செல்வதோடு கப்பலில் அனுப்பப்படுகின்ற பொருட்கள் பல ''தோலிருக்கச் சுளை விழுங்கி'' என்பது போல் வெளிக்கவசங்கள் உருப்படியாக இருக்க உள்ளீடுகள் மாயமாக மறைந்து விடுகின்றன. இதனால் அவற்றின் இழப்பீட்டையும் வர்த்தகர்கள் நுகர்வோரின் தலையில் கட்டியடித்து விடுகின்றனர். இது விலைஉயர்விற்கான ஒரு காரணமாகும்.

மற்றையதுஅத்தியாவசியப் பொருட்களைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வருவதில் ஒரு சில வர்த்தகர்கள் தனியுரிமையை வகிப்பதால் திட்டமிட்ட பொருள் தட்டுப்பாடு, பதுக்கல் போன்ற பல்வேறு வியாபார மோசடிகள் நடைபெறுவதும் விலை உயர்வுக்கு காரணமாகும்.

# வேற்றுமைகளைக் கடந்து இணையும் மனங்களின் போற்றுதற்குரிய புனிதமான காதலர் தினம்

காதல் கூட ஒரு வேதந்தான்! அந்த வேதம் மனித மனங்களில் வேரூன்றினால் ஆனந்தம் எங்கும் சிறகடிக்கும். காதலைப்பற்றி காவியங்கள் பல காணப்பட்டாலும் அவையெல்லம் வெறும் பட்டிமன்றுகளுக்கும் மேடைப் பேச்சுகளுக்கும் பயன்படுத்திவிட்டு யதார்த்த வாழ்வில் அதை ஏற்றுக் கொள்ள நாம் தயாராகாததால்தான் முரண்பாடுகள் தொடர்கின்றன.

இனங்களுக்கும் மதங்களுக்குமென சிறப்பான நாட்கள பல ஆண்டு தோறும் வந்து போகின்றன! நாமும் கொண்டாடிக் களிக்கிறோம்! மனமகிழ்வைத்தர வேண்டிய திருவிழாக்கள் இன மத முரண்பாடுகளை ஏற்படுத்தி விடுகின்ற சந்தர்ப்பங்கள் ஏராளம்.

ஆனால் இன, மத, நிற, பிரதேச வேறுபாடுகளை களைந்து இந்த உலகிலேயே ஒரு பெருவிழாக் காணும் நாள்தான் 'காதலர் தினம்'.

இந்தக் 'காதலர் தினம்' மட்டுந்தான் உண்மையில் மனித மனங்களுடன் சம்பந்தப்பட்டது! இதை நாம் அனைவரும் சேர்ந்து கொண்டாட வேண்டிய காலம் எப்போது மலர்கிறதோ அன்று பூமியில் உறவுகளின் புனிதம் புரிந்து கொள்ளப்படும்.

### ஆடம்பரமும் அடக்கமும்

முன்னேற்றமடைந்த நாடுகளில் காதலர் தினம் சிறப்பாகவே கொண்டாப்படுகின்றது! இந்தக் காதலர் தினம் சில பண்டைய கலாசார நெறிகளுக்குள் விலங்கிட்டுக் கொண்ட சமூகங்களிடையே வாசிக்கப்படாமலேயே வாய்ப்பிழந்து போகின்றது.

பூக்களுக்கு மவுசு காதலர் தினத்திலே தான். சிலமேலை நாடுகளில் அன்று மட்டுமே குறித்த ஒரு நகரத்தில் மட்டும் பல தொன்கணக்கில் பூக்கள் விற்றுத் தீர்க்கப்பட்டு விடுகின்றன;

அத்துடன் ஒற்றை றோஜா நான்கு இலக்கங்களுக்கு மேற்பட்ட விலைகளுக்கு விற்பனை யாவதும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

### யார் கொண்டாடுவது?

காதலர் தினம் யாரால் கொண்டாடப்பட வேண்டும் என்பதற்கு பலர் தப்பான பதில்களையே எப்போதும் தருகின்றனர்! அதாவது கல்யாணம் ஆகமுன் காதலுறவில் கலந்திருப்பவர்களுக்கு உரிய தினமென கூறுகிறார்

## ஆ ஜென்சன் றொனால்ட்

ஈச்சமோட்டை

கள். ஆனால் அதுதவறு இந்த காதலர் தினம் கல்யாணத்தை காணமுன் காதலித்துக் கொண்டிருப்பவர்கள் மட்டுமல்ல கல்யாணம்முடித்த பின் குடும்ப வாழ்வினுள் இணைந்திருக்கும் அத்தனை சோடிகளுமே கொண்டாட வேண்டியது.

காதலன் காதலி, கணவன் மனைவி எந்த உறவாய் இருந்தாலும் மனங்கள் இரண்டும் புதிதாக இருந்தால் குடுகுடு கிழவனும் கிழவியும் கூட சிவப்பு றோஜா பரிமாறி உறவுக்கு புது உறுதி சேர்த்துக் கொள்ளலாம்!

### புனிதமான தினம்

காதல் என்பதை வெளியில் சொல்ல கூச்சப்படும் பலர் நானும் காதலிக்கக் கூடாதா என உள்ளுக்குள்ளேயே ஏங்கிக் கொள்வது உண்மை!

இந்த மனிதப்பிறவி எடுத்த எவனும் வாழ்வின் ஒரு கணமாவது மனதில் காதலை முளைக்க விட்டிருப்பான். இதை வெளியில் ஒத்துக் கொள்ள கஷ்டமாக இருந்தாலும் மனச்சாட்சி ஆம் என்றே பதில் சொல்லும்.

ஆண், பெண் எனும் எதிர்ப்பால் கவர்ச்சியில் உருவாகும் ஒரு அன்புப்பிணைப்பையே சிறப்பாக எல்லோரும் 'காதல்' எனும் சொல்லுக்கு பொருளாக்குகின்றனர்.

கடவுள் ஆண், பெண் என்ற பாலியல் ரீதியில் வேறுபட்ட படைப்புகளை ஏன் செய்தார்? ஆம்! அங்கேதான் காதல் ஆரம்பிக்கின்றது,

இந்தஉலக வாழ்வில் ஒரு கட்டுக் கோப்புடன், ஒருதேடலுடன், ஒரு கவர்ச்சியுடன், வாழ்வை அனுபவிக்க இன்பதுன்பங்களை பகிர்ந்து கொள்ள, மனச்சுமைகளை இறக்கிவைக்க ஒரு ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஒரு ஆணும் தேவைப்படுவது அந்த ஆண்டவன் படைப்பின் ஒரு காரண காரிய விடயமே!

எனவே, கடவுளின் படைப்பின் இணைப்பைக் கட்டியம் கூறும் ஒரு புனிதநாளே இந்தக் காதலர்தினம்! உண்மையில் காதல் எனும் உறவு எல்லா உறவுகளையும்விட புனிதமானதே! ஏனென்றால் காதலில்தான் உலகிலுள்ள அத்தனை உறவுகளும் அடைக்கப்பட்டுள்ளன! எனவே இந்த உண்மை உறவுக்கு அர்த்தம்கூறும், மனங்களிலே நறுமணம்வீசி வாழ்க்கையை நந்தவனமாக்கும் காதலர் தினம் புனிதமானதே.

### காதலின் பொருள்

காதல் எனும் புனிதமான உறவுக்கு பொருள்தெரியாது போவதால்தான் காதல் காற்றுப்போன பலூனாக மாறிப்போகின்றது.

காதல்என்பது புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, தியாகம், அரவணைப்பு, தூய அன்பு, தேடல் விரகம், கல்வி என்ற பல பண்புகளின் ஒன்றிணைந்த திரட்டு! இதில் ஒன்றையொன்று ஆட்சிசெய்யாது. ஒவ்வொன்றும் சம ஆட்சியில் மனதுள் பேணப்பட்டு கைக்கொள்ளப்பட்டால் காதலின் அர்த்தமும் அதன் கண்ணியமும் புரியும்.

''என் தலைவியே
நீ என்னுடன்
கலவிக்குமட்டுமல்ல
காதலின் அத்தனை
கண்ணிய பண்புகளுக்கும்
அச்சாணியாகஇருக்கவேண்டும்'

என்று சொல்லும் ஆடவனும் அதன் பொருளையே உச்சரிக்கும் பெண்மகளும் மனங்களில் இணைந்து மணமாலை சூடிக்கொண்டால் காதலின் பொருள் அங்கே அர்த்தப்பட்டுக் கொள்கிறது!

'ஒரு றோஜாச் செடியாக
உன்னுள் முளைத்து
முட்களால் முட்டிக்கொள்ள
மாட்டேன்
அந்த மலரின்
இதழ்களாய் வந்து
சிந்தைதனை வருடிக்கொள்
வேன்!'

என்கின்ற காதல் எத்தனை இதமானது! இந்தக் காதல் எனும் உறவு இரண்டு மனங்கள சம்பந்தப்பட்டது! இதில் வேறு தலையீடுகள் ஆதிக்கம் செலுத்துவதாலோ அல்லது ஒரு மனமேனும் காதலின் பொருளை கைக்கொள்ளத் தவறும்போதோ மனமுறிவு ஏற்படுகின்றது.

### பேதங்கள் கடந்தது

காதல் எனும் புனிதமான உறவு சாதி, மத, இன, நிற, பிரதேச பேதங்கள் அற்றது! குறிப்பாக கண்மூடித்தனமான வரம்புகளை மாற்றியமைக்கும் வலிமை காதலுக்கு உண்டு.

வகுப்புகளும், கலாசாரங்களும், கொள்கைகளும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கே பயன்பட வேண்டும். இவை மனித மனங்களையும் உறவுகளையும் கூறுபோடும் போது அவற்றை ஒழிப்பதே சிறந்தது!

காதலில் கலந்த உறவுகள் சுயநலம் மறந்த சுத்தமான மனங்களாக இருக்கும்போது அந்தக்காதல் காலமெலாம் வாழும்!

வாழ்வின் சந்தோஷங்களை மட்டுமல்ல சோக மூட்டைகளையும் பகிர்ந்து கொள்வோம் எனும் மன உறுதியுடனும் தடைகளை உடைத்து இலக்கை அடைவோம் எனும் நம்பிக்கையுடனும் காலமெலாம் காதலை வாழவைப்போம் எனும் கட்டியமும் கூறும் மனங்களெல்லாம் இந்த காதலர்தினத்தை புனிதமாக பேணி என்றும் மகிழ்கின்றன! ஆம்! காதலை நாமும் வாழ்த்தி அதன் கண்ணியங் காப்போமாக!

## நிர்வாகசபை தெரிவு

(ஈச்சமோட்டை)

யாழ். இளையோர் இலக்கிய வட்டத்தின் நிர்வாக சபையின் தலைவராக கு. ரஜீபன், செயலாளராக ஆ. ஜென்சன்றொனால்ட், பொருளாளராகஎஸ்.கரிகரன் உபதலைவராக க. ஜெசீதன்' உப செயலாளராக எஸ்.நந்தினி ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக க. தர்மினி, செ. தீபா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (செ-59)

## சாயி அருளமுதம்



மனிதனுக்கு மிகுந்த நன்மை பயக்கக் கூடியஆன்மீகக் கட்டுப்பாட்டின் வழிமுறை புராதனஇந்தியாவின் அரும் பெரும்வேதாகம நூல்களில் சுலபமான இனிய முறையில் கூறப்பட்டுள்ளது. அண்ட சராசரத்தில் நிறைந்துள்ள தெய்வீக நியமத்தை உதாரண மூலமாகவும், அறிவுரை மூலமாகவும் அவை விளக்கி, கடவுளின் கைவண்ணத்தையும் ஆராய்ந்து அறியவொண்ணாத இறைவன் லீலையையும் பக்தி பரவசத்துடன் உற்று நோக்குவதற்கு மனித குலத்தைத் தூண்டுகிறது.

தியாகம் என்னும் யாத்திரைப் பாதையில் மனிதன் சாதுக்களுடன் சந்தோஷமாக வீறு நடைபோடுவதற்கு அவை தூண்டுகோலாக அமையும். இதன் காரணமாக நித்திய வஸ்துவின் தர்சனத்தைப் பெற்று அதை என்றென்றும் இருதயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கச் செய்ய முடியும் என்பதைத் தேகம் உணர்ந்து கொள்ளும்.

நன்றி

- நாளாந்த நற்சிந்தனை.



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (2)

'மெசியா வரவேண்டும் உரோமையர்கள் எங்கள் மேல் அழுத்துகின்ற அடிமைத்தனங்களை அவர் நொறுக்க வேண்டும். தாவீதின் பொன்னான ஆட்சியை மீண்டும் மலர செய்ய வேண்டும். எல்லா அரசுகளிலும் வல்லமைமிக்க பேரரசாக எங்கள் நாடும்இனமும் மாறவேண்டும்.' இதுதானே மெசியா பற்றியமக்களின் கனவு. ஆனால் மெசியா பற்றிய இறைவனின் திட்டத்தை இயேசு அறிக்கையிடுகிறார். அதுமட்டுமல்ல தன்னைப் பின்பற்ற விரும்பும் சீடர்கள் தன்னலம் துறக்க வேண்டும். தினசரிசிலுவைகள் ஏற்கவேண்டும். உயிரை இழக்க வேண்டும். உலகை இழக்க முன்வரவேண்டும் என்கிறார். இறைவனின் இந்தத் திட்டமும் இயேசுவின் எதிர்பார்ப்பும் நம்முடையதாகாவிடில் நாம் இயேசுவின் சீடர்களாக ஆகஇயலாது. இறைவனது அரசில் பங்கேற்க இயலாது.

காவலன்-

# இத்தாலி சென்ற 44 இலங்கையர் கைது!

(லண்டன்)

இத்தாலிக்கு சட்டவிரோதமாக சென்ற 44 இலங்கையர்களை தெற்கு இத்தாலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்தாலி கலாபிரியன் கடற்பகுதியிலிருந்து ரொக்செல்யோனிக்க என்னும் இடத்திற்கு இவர்கள் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் பதினாறு தொடக்கம் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க இவ் இளைஞர்கள் தமக்கு தேவையான உணவுப் பொருட்களும், உடைகளும் தம்முடன் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்கள் தற்போது விசாரணைக்காக அகதிகள் தங்க வைக்கப்படும் முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-4)

## எரிபொருள்..

காங்கேசன்துறையில் உள்ள விநியோக முகாமையாளர் எஸ். சிறில் ஆகிய இருவரும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் இ.த.விக்கினராஜா முன்னிலை யில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வடபிராந்திய எரிபொருட் கூட்டுத்தாபனத்தின் முகவர்களாக செயற்படும் ப.நே.கூ.சங்கங்கள், மற்றும் தனியார் முகவர்கள் மூலமும் பாவனையாளர்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என் றும் அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (வ)

## பஸ்..

பிரஸ்தாப சிறுமி தனது தந் தையாருடன் சைக்கிளில் பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்து போது இவ் விபத்து சம்பவித்துள்ளது. எனினும் சிறுமியின் தந்தை மங்களேஸ்வரன் தெய்வாதீனமாக எதுவித காயங்களும் இன்றி உயிர் தப்பினார்.

சிறுமியின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு மரண விசாரணைக்காக வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப சிறுமியின் தாயாரும் ஏற்கனவே இறந்துபோயுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ.10.104.12)

## புலிகளின்...

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் காணப்படாத விடயங்களால் உடன்பாட்டுக்கான மாற்றுத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டியநிலையில் நோர்வே அதற்கான ஆயத்தங்களையும் செய்யத் திட்டமிட்டுள்ளது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டுவரும் நோர்வேயின் சமாதானக் குழுவினர் வன்னி முடிவுகளை எதிர்பார்த்து மாற்றுத் திட்டத்துடன் மீண்டும் அடுத்த வாரமளவில் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசுவதற்குத் தயாராக உள்ளனர்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை அடுத்த வாரம் லண்டனில் சந்தித்த பின்னர் நோர்வேத் தூதுக்குழு மீண்டும் பேச்சுக்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறும். (வ)

## பல்கலைக்கழக...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கல்விச் சீர்திருத்த நடவடிக்கையின் கீழ் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Z ஸ்கோர் வெட்டுப் புள்ளிக்கெதிராக மாணவர்கள் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இதனால் மேல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கும் வரை பல்கலைக்கழக அனுமதிகள் தாமதமாகும்.

அதேவேளை, நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியவுடன் Z ஸ்கோர் முறையை ஆய்வு செய்வதற்கென ஒரு குழு நியமிக்கப்படும் எனவும், அவ் ஆய்வின்படியே மாணவர்களுக்கான அனுமதி வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## கப்பம்..

இதேவேளை நேற்று வவுனியா செட்டிகுளம் பகுதியில் புலிகளின் பெயரைக்கூறி கப்பம் வாங்க முற்பட்டவேளை இராணுவத்தினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந.4)

## படைகளில்..


லாம் படையினர் கவனத்தில் எடுக்காமல் தப்பியோடுகின்றனர். இதனை ஆழமாக நோக்கி அதற்குரிய காரணத்தை கண்டறிவது முக்கியமான அவசர தேவையாகும் என்று அவர் கூறினார்.

அத்துடன் தற்பொழுது நாட் டில் நிலவும் அமைதிச் சூழலை பயன்படுத்தி படையினரின் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் வழிவகைகள் செய்யப்போவதாக அமைச்சர் மாரப்பன மேலும் கூறியுள்ளார். (இ)

## யாழ்..

செய்யவேண்டும் அல்லது அவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யவேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 17கைதிகளும் தம்மீதான விசாரணை களை துரிதப்படுத்துமாறு கோரி இம்மாத



யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் இவ்வருடம் முதன் முதலாக ஆரம்பித்த 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன், பனை அபிவிருத்திச் சபையால் வழங்கப்பட்ட கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வர்த்தக வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திரு. இரவீந்திராவிடமிருந்து பெற்றுக் கொள்வதையும், சங்கச் செயலாளர் திரு. சகாயராஜா அருகில் நிற்பதையும், சங்கத் தலைவர் திரு. க. இராசதுரை, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. கமலநாதன், சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. த. தனபாலன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஒளிவிழாவில் கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியை செல்வி. பீ. யூக்கிறிஸ்ரின் குத்து விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பழைய மாணவன் வண.பிதா. நேசகுமார் அடிகளார், கிறிஸ்தவ மன்றத் தலைவர் செல்வன். எப்.எக்ஸ். சுதர்சன், கல்லூரி அதிபர் க. இராசதுரை ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

வலி தென்மேற்கு மக்கள்
வலம்புரியில் இலகுவாக விளம்பரம் செய்ய
எமது விளம்பர முகவர்
"திருப்பதி"
இல.15, மெமோறியல் லேன்,
மானிப்பாய்.
தொலைபேசி: 3143 பக்ஸ்: 2887
உங்கள் விளம்பரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
வலம்புரியின் விளம்பர முகவர்களாகச் செயற்பட விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.
- நிர்வாகம் -

## JAFFNA CENTRAL COLLEGE

OLD BOYS ASSOCIATION - COLOMBO BRANCH

### JCC SCHOLARSHIP AWARD - 2001

The Colombo Branch of the Old Boys Association is happy to announce that twenty four students have been selected for the JCC SCHOLARSHIP AWARD - 2001 of this, six students belong to Advanced level I, twelve students belong to Advanced level II while six students belong to the University Education categories.

Individual letters to the awardees have been despatched and first payment shall be effected once their letters of consent are received bythe Association.

LIST OF SCHOLARSHIP AWARDEES - 2001

காளான் வில்லைகள்
ரூபவாஹினி, சக்தி ரி.வியில் இந்திய டாக்டர்களின் பேட்டியில் கூறப்படும் காளான் வில்லைகளை
மாரியம்மன் மிலேனியம் ரெலெக்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
T.P. No: 070 - 213073
070 - 212778
7/9, ஒலிவ் லேன், மட்டக்களப்பு.
T.P. No: 065 - 23374
100, மருதானை ரோட், வெருகல், வத்தளை

## LIST OF SCHOLARSHIP AWARDEES - 2001

***Advanced level 1***

JSA 34 N. Kantheepan
JSA 35 S. Sureskumar
JSA 36 T. Iyankaran
JSA 37 Sivasothy Stanley
JSA 38 A. Pavitharan
JSA 40 S. Thayatharan

***Advanced level 2***

JSA 01 P. Pratheepan
JSA 02 N. Kayatheepan
JSA 03 N. Akilanath
JSA 04 P. Thananjeyan
JSA 05 K. Vijayakumar
JSA 06 K. Sivanesan
JSA 07 B. Jayanthapavan
JSA 08 T. Venkadesan
JSA 09 A.J. Densing
JSA 10 Y. Thananjeyan
JSA 11 S. Sayanthan
JSA 12 S. Manotheepan

***University***

JSA 13 T. Sudharshan
JSA 14 T. Thayaparan
JSA 15 S.S.A.R. Nilochkumar
JSA 16 S. Senkeeran
JSA 18 M. Jude
JSA 42 N. Ranthikumar

*236/4. Galle Road,*
*Colombo - 3.*
T.Phone: 574199.

**M. ARULANANTHAM**
(Hony. Secretatry)

[C/3535]


ளும் தம்மீதான விசாரணை களை துரிதப்படுத்துமாறு கோரி இம்மாத ஆரம்பத்தில் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதனையடுத்து இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கு துரித நடவடிக் கை எடுக்குமாறு வடமாநில பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி. கஜ நாயக்காவையும்; யாழ். நீதிபதி பணித்துள்ளார். (வ)

---

## அமைச்சர்..

ளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தை சென்றடைந்தார். அமைச்சர் அங்கு புலிகளின் முக்கியஸ்தர்களோடு பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

கொக்கட்டிச் சோலையில் உள்ள மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஜெயாவை சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்தில் 100நாள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இருசாராருக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

போர்ச்சூழலிலும் விடுதலைப் புலிகள் மண்மீட்பிலும், மாணவர்களின் கல்வி நடவடிக்கையிலும் கூடிய கவனம் செலுத்துவதை தனது இரு விஜயங்களின் போதும் காணக் கூடியதாக இருந்ததென அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந.4)


100, மருதானை ரோட், ஹெந்தல, வத்தளை
T.P. No: 078 - 606754

**ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

[C/3523]



**கரிதாஸ் இலங்கை - செடேக் கொழும்பு**
நிறுவனங்களின் அனுசரணையுடன்

## யாழ்- மனித முன்னேற்ற நிலையம்

**அகில இலங்கை பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய மனித உரிமைகள் கட்டுரைப் போட்டி முடிவுகள்**

**1வது பரிசு:**

**அமிர்தசுலோசனா சுந்தரலிங்கம்**
*(ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்னாகம்)*

**2வது பரிசு:**

**சாளினி சிவதாஸ்**
*(வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

**பாராட்டுப் பரிசினைப் பெறுவோர்:**

**நடராசா தவச்செல்வம்**
*(கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்)*

**றோசாணி வீரராஜன்**
*(திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்)*

**J. அனற் றமணி**
*(சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை)*

இயக்குனர்,
**மனித முன்னேற்ற நிலையம் (கியூ டெக்)**
யாழ்ப்பாணம்.

[C/3536]



இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.